# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2311/34 – 2022 දෙසැම්බර් මස 22 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.12.22

*2311/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 22 ஆந் வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக் கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில், புளூமென்டல் கிராம அலுவலர் பிரிவில், புளூமென்டல் (பிரிவு இல. 6, புளூமென்டல் கொழும்பு மாநகர எல்லையினுள்) கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.10.13 ஆந் திகதிய CO/COL/2020/416 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பின்வரும் பெயர்கள் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டின் எல்லைகள் :

**01. துண்டு இல. 01 - 312 தோட்டம் (ஒரு பகுதி) - விஸ்தீரணம் : 0.0924 ஹெக்டயார்**

வடக்கு: கால்வாய்; கிழக்கு: கால்வாய் மற்றும் சிரில் சீ பெரேரா மாவத்தையின் வரி மதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை கோருவோரை கண்டுபிடிக்க முடியாத காணி; தெற்கு: சிரில் சீ பெரேரா மாவத்தையின் வரிமதிப்பீட்டு இலக்கம் மற்றும் உரிமை கோருவோரை கண்டுபிடிக்க முடியாத காணி மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமை கோரும் 312 தோட்டம் மற்றும் கால்வாய்; மேற்கு: நகர அபிவிருத்தி அதிகாரசபை உரிமை கோரும் 312 தோட்டம் மற்றும் கால்வாய்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : 4-3/16/2018/UDA/470
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
'மிஹிகத்த மெதுர' காணிச் செயலகம்,
இல.1200/6, இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, யூன் 30.

EOG 12 - 0278



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.